1973 நவம்பர் 26]

டாக்டர் எச். வி. ஹாண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு இந்த இலாகாவிற்குப் பொறுப்பாக இருந்த மாண்புமிகு என். வி. நடராசன் அவர்கள் சூளைப் பகுதியில் ஒரு பிராஞ்சை ஓப்பன் பண்ணிவைத்து அதைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொன்னார்களே, அது எந்த நிலைமையிலே இருக்கிறது, அதை எப்பொழுது துவங்கப் போகிறார்கள் ? அது துவக்கப்படும்பொழுது எத்தனை பேர்களுக்கு அதிலே வேலை கிடைக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சரியான தகவலைத் தெரிவிக்க முடியாமைக்கு வருந்துகிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல்: வளர்ந்து வருகின்ற சென்னை மாநகரத்தினுடைய நெரிசலைக் குறைக்கவேண்டுமென்ற கொள்கையை ஏற்றுக்கொண்டுள்ள நம்முடைய அரசு இப்படிப்பட்ட அச்சகங்களை புறநகர்ப் பகுதிகளுக்கு மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த நல்ல யோசனையின் படியும் இனிமேல் புதிதாகத் துவக்க இருக்கின்ற பிரிவை மறைமலை அடிகளார் நகரில் துவக்கலாம் என்ற கருத்து அரசின் ஆலோசனையில் இருக்கிறது.

Special buses for temple visits

* 414 *Q*.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to organise visits to the temples in the State by the State Transport Department; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.